**தலைப்பு 148 – அபிவிருத்தி ஒப்படை அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி ஒப்படை அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி ஒப்படை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 ஒக்தோபர் 8 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தம்பர் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அபிவிருத்தி ஒப்படை அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. மேலும் அதன் காரணமாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 2 மாதங்கள் 15 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 மே 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செலவினத்தலைப்பு வேறுபடல், நிதிஏற்பாடு வழங்காமை மற்றும் கணக்கீடு செய்தல் தொடர்பாக அறிவுறுத்தல் ஆண்டின் இறுதி வரை கிடைக்காமை மற்றும் போதயிளவு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இல்லாமை உரிய திகதியில் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்க முடியாமல் இருந்தது. |
| (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று | | |
| 2017 யூலை 05 ஆந் திகதிய 2017/256 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 14801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான | - மேற்படி - | - மேற்படி - |

முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 2018/267 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றிக்கையின் பிரகாரம் 2019 பெ்ரவரி 28 ஆந் திகிதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும் அது 02 மாதங்கள் 15 நாட்கள் பின்னர் 2019 மே 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.6.2 பொது கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்காமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் 23 ஆந் திகதிய 2064/26 ஆம் வர்த்தமானியின் மூலம் தலைப்பு 148 அபிவிருத்தி ஒப்படை அமைச்சு ஒழிக்கப்பட்டிருந்தமையால் அமைச்சிற்குரிய அத்திகதி வகையான கொடுக்கல் வாங்கல்கள் இந்நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுளள்ன. எனினும் புதிதாக உருவாக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சிற்கு உரிய செலவினத்தை தீர்வு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் மற்றும் மேலும் ரூபா 195 மில்லியன் நிதிஏற்பாடு களையும் இத்தலைப்பிற்கு வழங்கப்பட்டிருந்த போதும் அந்நிலைமை கணக்கு குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சகல முக்கியமான விடயங்களும் கணக்கு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். | இது தொடர்பாக வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுக்களுக்காக ஏசீஏ2(ii) இன் கீழ் காணிப்கக்பட்டுள்ளதாக எடுக்கப்படும். |

**1.6.3 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு |
|---|---|---|

| | | | உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையின் 7 (IV) பந்தியின் பிரகாரம் நிதி நிலைமை கூற்றின் காண்பிக்கப்பட்ட ஆதனங்கள், பொறிகள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கு சமமாக தேறிய சொத்துக்களின் பெறுமதிக்கு சொத்துக்களின் கீழ் ஒதுக்கமாக காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தேறிய சொத்துக்கள் / உரிமையின் கீழ் திறைசேரிக்குரிய தேறிய சொத்துக்களின் காண்பிக்கப்பட்டுள்ளதாக |
| (ஆ) | சுற்றறிக்கையின் 7 (VI) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு தீர்க்கபட வேண்டிய பெறுமதியை ஒப்பிடுவதற்காக இணக்கக்கூற்றொன்று ACA - 3 படிவத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளதாக |

### 1.6.4 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் செலவினத்திற்காக எதிர்பாராத நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை செலவிடப்பட்டிருந்தது. அரசியலமைப்பின் 151 உறுப்புரைக்கு அமைவாக மற்றும் நி.பி 78(அ)(3) இன் பிரகாரம் இம்முற்பணத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்று பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு விரைவில் தீர்வுசெய்ய நடடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதும் 2019 மே வரையில் தீர்வுசெய்யப்பட்டிருகக்வில்லை. இதன் காரணமாக செலவிடப்பட்டிருந்த பணம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் இம்முற்பண வருமானம் அல்லாத பெறுவனவுகளாக காண்பிக்கப்படாமல் திறைசேரியிடமிருந்து கிடைத்த | எதிர்பாராத நிதியத்திலிருந்து முற்பண பெறுவனவு பொது வைப்புக் கணககினூடாக கிடைப்பதால் அப்பெறுமதி பொது வைப்பு பெறுவனவொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்பாராத நிதியத்தின் கீழ் பொது வைப்புக் கணக்கிற்கு கிடைத்த பணம் நிதியல்லாத செயலாற்றல் கூற்றில் வைப்பு பெறுவனவொன்றாக காட்டப்படவில்லையெனவும் எதிர்பாராத நிதியத்திலிருந்து செலவிடப்படும் செலவினம் கணக்கீடு செய்வதற்கு நிதிஏற்பாடு கிடைத்ததன் பினன்ர் அது கணக்கீடு செய்யும் போது சுாண்பிக்கப்படலாம் |

கட்டுநிதியாக காட்டப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்குரிய மொத்த பெறுவனவுகள் ரூபா 3.52 மில்லியன் மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 9.16 மில்லியன் ஆக இருந்த போதுத் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 0.85 மில்லியன் மற்றும் ரூபா 3.15 மிலலியன் என காட்டப்பட்டமையால் முறையே ரூபா 2.67 மில்லியன் மற்றும் ரூபா 6.01 மிலலியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்கு அமைச்சின் மூலம் அறவிடப்படுகின்ற மற்றும் திறைசேரியினால் செலவின விடயத்திற்கு அறவிட்படும் அனைத்து பணமும் முற்பண பெறுவனவொன்றாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட வேண்டும். | ரூபா 2,667,194 தொகை கிடைக்காமல் இருந்ததுடன் அது கணக்கினூடாக வரவு பதிவுகளாக மாற்றமொன்றான போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் கிடைத்த பணம் மாத்திரம் குறிப்பிடப்பட்டதுடன் அவ்விபரங்கள் ACA-05 படிவத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளதாகவும் |

### 1.6.5 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3.84 மில்லியனாக இருந்த போதிலும் அது திறைசேரியின் பதிவேடுகளுடன் ஒப்பிடப்பட்டிருக்கவில்லை. உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாக பொது திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டும். | தலைப்பொன்று ஒதுக்கீடு செய்யப்படாமையால் அவ்வாண்டில் இப்பெறுமதி கணக்கீடு செய்வதற்கு தவறியமையால் அம்மீதிகள் திறைசேரியின் பதிவேடுகளில் அவதானிக்கப் படவில்லையெனவும் |
| (ஆ) | ஏனைய அமைச்சினால் இந்த அமைச்சிற்கு கையளிக்கப்பட் தற்போது பயன்படுத்தப்படும் அமைச்சின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1.72 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்குரிய சகல நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் குறிதத் கொடுக்கல் வாங்கலகள் கணக்கீடு செய்வதற்காக தேவையான ஆலோசணை கிடைக்காமை காரணமாக கணக்கீடு செய்யப்பட வில்லையென |
| (ஆ) | நிதி நிலைமை தொடர்பாக கூற்றில் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 81,704,540 ஆக இருந்த போதும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 80,069,532 ஆக இருந்தமையால் | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | முற்பணமாக 322-11 (பணமாக கொடுப்பனவு0 இன் கீழ் மீதியான ரூபா 81,704,536 ஆக இருந்தது. |

ரூபா 1,635,008 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.6 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் தேறிய பணத்தின் வேறுபாடு பூச்சியமாக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 51.14 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. | காசு பாய்ச்சல் கூற்றில் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | எதிர்பாராத நிதியத்தின் வழங்கப்பட்ட பணத்திற்கான செலவினம் பதிவேடுகளுக்கு உட்படுத்த நிதிஏற்பாடு வழங்கப்படாமை |

### 1.6.7 வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் செலவினத்திற்காக எதிர்பாராத நிதியத்திலிருந்து பெறுவனவு களுக்குரிய பொது வைப்புக் கணக்கிற்கு உரியதல்லாத ரூபா 196,889 தொகையான ஏனைய பெறுவனவுகள் மற்றும் ரூபா 336,441 தொகையான ஏனைய வைப்பக்கள் கொடுப்பனவு அந்த வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பொது வைப்புக் கணக்கிற்குரிய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டும் | செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சிற்கு தலைப்பொன்று இல்லாமையாலும் அதற்காக நிதிஏற்பாடு கிடைக்காமையாலும் பொது வைப்புக் கணக்கு திறப்பது நடைமுறைச் சாத்தியமற்றதால் வைப்புக் கணக்கு திறக்கப்படவில்லை. |
| (ஆ) மீளாய்வாண்டிற்குரிய பொது வைப்புக் கணக்கிற்குரிய மொத்த பெறுவனவுகள் ரூபா 50.19 மில்லியன் ஆக இருந்ததுடன் கொடுப்பனவுகள் ரூபா 50.33 மில்லியனாக இருந்தமையால் பெறுவனவுகளை விஞ்சி ரூபா 0.14 மில்லியன் கொடுப்பனவு செயய்ப்பட்டிருந்தது. | பொது வைப்புக் கணக்கின் பெறுவனவுகளுக்கு சமமான தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |

### 1.6.8 கட்டுநிதி மீதி

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1.18 மில்லியனான கட்டுநிதி மீதி திறைசேரிக்கு தீர்வுசெய்யப்பட்டிருந்த போதும் திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் அது மேலும் தீர்க்கப்பட காண்பிக்கப்பட்டிருந்தது.. | திறைசேரி பதிவேடுகளுடன் ஒபபிடப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வுசெய்யப்பட வேண்டிய தொகையாக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் தீர்வுசெய்யப்பட்டுள்ளதாக |

### 1.6.9 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியின் பின்னர் சேவைக் கட்டணங்கள் மற்றும் ஒப்பந்த கொடுப்பனகளில் 10 சதவீதம் கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். எனினும் சேவை உடன்படிக்கை 3 இற்குரிய கொடுப்பனிவன் பேரில் ரூபா 2.56 மில்லியன் கழிக்கப்படாமல் முழுத்தொகையும் உரிய தரப்பினருக்கு கொடப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவினுள் நிதி குத்தகை வசதிகளக்காக நிறுத்திவைத்தல் கழிப்பது தொடர்பாக குறிப்பிடப்படாமையால் மேற்குறித்த சேவை உடன்படிக்கைக்கு அவவாறு நிறுத்திவைத்தல் வரி கழித்தல் தேவையற்றதென |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 41 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சில் ரூபா 3.52 மில்லியன் கூட்டுத்தொகையும் 28 மீண்டெழும் செலவின விடயங்களுக்கரிய 05 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையில் ரூபா 35.61 மில்லியனுமாக மொத்தம் ரூபா 39.14 மில்லியன் குறைப்பயன்பாட்டிற்குட்பட்டிருந்தது. இது மொத்த சேமிப்பின் 28 சதவீதமாகும். | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிதிஏற்பாடுகளை செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவினம் முறையாக முகாமை செய்ய முடியவில்லையென |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அமையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 476 மில்லியன் அல்லது 48 சதவீதம் மாத்திரம் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 289 செயற்திட்டங்கள் 11 மாவட்ட செயலகங்களில் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தன. அபிவிருத்தி ஒப்படை அமைச்சு 2018 மார்ச் முதல் ஒழிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த விடயத்தின் கீழ் இருந்த செயற்திட்ட முகாமைத்துவம் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் மூலம் அச் செய்திட்ட மீளாய்வாண்டு இறுதி வரை தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டின் இறுதி வரை இச் | மீளாய்வாண்டின் இறுதி வரையில் புர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1000 மில்லியனை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் தேறிய பாதீட்டு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட வாய் மொழி அறிவித்தலின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எற்பாடு ரூபா 500 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் 11 மாவட்டங்களுக்காக ரூபா 475.54 மில்லியன் பெறுமதியான 287 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு 118 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டன. அச்செயற் திட்டங்களில் 2018 திசெம்பர் 31 இல் செயன் முன்னேற்றம் 121.97 மில்லியன் மற்றும் இதுவரை தொடர் வேலையாக அங்கீகாரம் கோரப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 126.72 மில்லியன் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்களுக்கு இடையே 115 செயற்திட்டங்கள மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருநததுடன் திட்டமிடப்பட்ட 174 செயற்திடடங்களை தவறியிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதியில் செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நிதி செயன் முன்னேற்றம் ரூபா 123 மில்லியனாக இருந்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 26 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | | இருந்தனால் செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றம் ரூபா 248.69 மில்லியனாகும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் யூன் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 112,240 பெறுமதியான 04 பெக்ஸ் இயந்திரங்கள், ரூபா 124,740 பெறுமதியான 6 கணனி அச்சிடல் கருவிகள் மற்றும் ரூபா 79,500 பெறுமதியான தொலைக்காட்சி இயந்திரமொன்று 2019 மே வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று வகையில் வைக்கப்ப்டிருந்தன. | தேவைப்பாடு குறிப்பாக இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் அவற்றை தேவையான இடங்களுக்கு தாமதமின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இப்பொருட்களை கோரிய பிரிவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

**3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 இற்கு அமைய அமைச்சில் பிணை வைக்க வேண்டிய எந்தவொரு உத்தியோகத்தரும் பிணை வைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணை வைக்க வேண்டிய எந்தவொரு உத்தியோகத்தர் களிடமிருந்து அப் பிணையை பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு செயற்படுவதாக |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள இளைஞர் அலுவல்கள் பிரிவிற்கு 18 சாரதிகள் இணைக்கப்பட்டிருந்த போதும் அச்சந்தர்ப்பம் வரை பிரிவிற்கு சொந்தமாக 06 வாகனங்கள் மாத்திரம் காணப்பட்டன. மிகையான 12 சாரதிகளுக்காக 2018 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மாத்திரம் சம்பளமாக ரூபா 903,972 செலுத்தப்பட்டிருந்தது. | சேவைகளின் தேவைப்பட்டின் பிரகாரம் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். | செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் சாரதிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. |
| (ஆ) | ஏனைய அரச நிறுவனங்களால் அபிவிருத்தி ஒப்படை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த மற்றும் பின்னர் செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் இளைஞர் விவகார மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சினாலும் பயன்படுத்தப்பட்ட 06 வாகனங்கள் உரிய நிறுவனங்களால் கையேற்கப்பட்டிருக்கவில்லை | வாகனங்களின் உரித்தினை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சிற்கு கையேற்கப்படவில்லை யென |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் அமைச்சினால் தமது விடயப் பரப்பிற்கு எடுக்கப்படும் விடயங்கள் தொடர்பாக செயற்பட வேண்டிய பதவியணியினர் அறிந்திருக்க வில்லை. | குறித்த ''நிகழ்ச்சி நிரல்'' இலக்கினை அடைந்து கொள்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் இளைஞர் பிரிவின் கடமைகள் தொடர்பாக ஒவ்வொரு உத்தியோகத்தரும் அறிவூட்டப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு உரிய கடமைகள் பட்டியல் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் |

**5. நல்லாளுகை**

**5.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(1) பிரகாரம் அமைச்சினால் மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு திட்டம் தயாரிக்க முடியாமல் போனதாக |

**5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் சுற்றறிக்கையின் டீஎம்ஏ/2009(I) மற்றும் டீஎம்ஏ/2009(I)(i) பிரகாரம் வருடத்திற்கு கணக்காய்வு மற்றும் 04 முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு முடியாதிருந்ததாக |